Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 106/2025**

Preliminary Register

Deposition of **PW-1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் | Father Name | : | சரவணன் |
| Village | : | வில்வராயநல்லூர் | Taluk | : | கும்பகோணம் |
| Caste | : | | Calling | : | காய்கறி கடையில் வேலை |
| Religion | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து காய்கறி கடையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 08.01.2025 ம் தேதி மாலை 04.30 மணியளவில் கொராடாச்சேரியில் வேலையை முடித்து வீட்டுக்கு செல்வதற்காக TN 50 N 5907 என்ற பதிவெண் கொண்ட Pulsor இருசக்கர வாகனத்தில் ராக்கபெருமாள் கோவில் வழியாக வந்து பைபாஸில் ஏறினேன். அடவங்குடி குறுக்கு ரோடு பிரியும் இடத்தில் ஒரு crusher plant உள்ளது. நான் நீடாமங்களம் - திருவாரூர் பைபாஸில் வந்துகொண்டிருந்தபோது அடவங்குடி ரோட்டிலிருந்து St. Marry's Metriculation school Bus ஐ ஓட்டி வந்த ஆஜர் எதிரி அடவங்குடி ரோட்டிலிருந்து பைபாஸில் ஏறி எதிர்புறம் உள்ள சாலைக்கு செல்வதற்காக நீடாமங்களம் - திருவாரூர்

பைபாஸ் ரோட்டை குறுக்கே கடக்கும் போது கவனக்குறைவாக நான் சென்ற வாகனத்தில் மோதிவிட்டார். நானும் நான் சென்ற இருசக்கர வாகனமும் பள்ளி வாகனத்தில் முன்புறம் உள்ள இடது பக்க சக்கரம் மோதியதில் நானும் எனது இருசக்கர வாகனமும் அந்த வாகனத்துக்கு கீழே மாட்டிக்கொண்டு அந்த பள்ளி வாகனம் பைபாஸ் சாலையிலிருந்து எங்களை இழுத்துக் கொண்டு கீழ்புறம் வந்தது. அதில் எனக்கு இரு கால்களிலும் தலையிலும் வலது பக்க தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது. எனது இரண்டு கால்களும் இருசக்கர வாகனமும் பேருந்தில் முன்புறம் உள்ள சக்கரத்தில் மாட்டிக்கொண்டது. அங்கிருந்த நபர் ஒருவர் என்னை முதலுதவி சிகிச்சைக்காக நீடாமங்களம் அரசு மருத்துவமனைக்கு அழைத்தச் சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு சென்று விட்டேன். வீட்டிற்கு சென்ற பிறகு எனக்கு தலைவலியும் வாந்தியும் வந்தது அதனால் மறுநாள் நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் நான் நடந்த விபத்துக்குறித்து வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது). நான் சிகிச்சைக்கு சேர்ந்த மறுநாள் போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

கடந்த 08.01.2025 அன்று மாலை 04.30 மணிக்கு எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என்னிடம் எங்கு வைத்து எந்த தேதியில் புகார் பெறப்பட்டது என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து 10.01.2025 அன்று புகார் பெறப்பட்டது. ஆனால் போலீசார் என்னிடம் புகார் பெற்றது 28.01.2025 அன்றுதான் என்றால் சரியல்ல. கடந்த 10.01.2025 அன்று தான் என்னிடம் போலீசார் புகார் பெற்றனர் என்பதற்கு எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான் ஆனால் கடந்த 10.01.2025 அன்று என்னிடம் மருத்துவமனையில் வைத்து வலங்கைமான் பெண்

காவலர் ஒரு நோட்டில் கையொப்பம் வாங்கினார். பின்பு அவர் என்னிடம் வலங்கைமான் போலீசார் எனது வீட்டிற்கு வந்து புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கொள்வார்கள் என்று கூறினார். ஆனால் 2 வாரங்களாக யாரும் அவ்வாறு என்னிடம் வந்து புகார் பெறவில்லை, ஆகையால் நான் வலங்கைமான் காவல் நிலையம சென்று அதுபற்றி கேட்டேன், அதற்கு அங்கு உள்ள காவலர் என்னிடம் அன்றைய தினமான 25.01.2025ம் தேதியிட்டு புகாரை பதிவு செய்து கொள்கிறேன் என்று கூறினார்கள், அதன்பிறகு அதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் முதல்வரின் தனிப்பிரிவிற்கு புகார் தெரிவித்தேன். அதன்பிறகு மீண்டும் 28.01.2025 அன்று எனது வழக்கறிஞருடன் காவல் நிலையம் சென்றேன், 25.01.2025 அன்று இருந்து காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் பணிமாற்றம் பெற்று சென்றுவிட்டார் புதிதாக வந்த காவல் உதவி ஆய்வாளர் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் 28.01.2025 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். நான் 28.01.2025 எனது வழக்கறிஞருடன் சென்றபிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் புகார் பெரும்போது நான் என்ன நிலையில் இருந்தேன் என்றால் நான் சுய நினைவுடன்தான் இருந்தேன். நீடாமங்களம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சைக்காக சேரும் போது நான் என்ன சொன்னேன் என்றால் ஒருவர் கேட்டுக்கொண்டதால் கீழே விழுந்து காயம்பட்டது என்று கூறினேன். நான் விபத்து ஏற்பட்டபோது எந்த திசையிலிருந்த எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றேன். பள்ளி வாகனம் எந்த திசையிலிருந்த எந்த திசை நோக்கி வந்தது என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. நான் எனது புகார் வாக்குமூலத்தில் மேற்படி திசைகளை கூறியுள்ளேனா என்றால் நான் கூறினேன் ஆனால் அதில் குறிப்பிடப்படவில்லை. என்னை நீடாமங்களம் அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் எனது நண்பர் என்னை அழைத்து சென்றார். நான் வந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளதால் என்றால் இல்லை நான் அதற்கு அபராதம் கட்டியுள்ளேன். எவ்வளவு தொகை அபராதம் கட்டியுள்ளேன் என்றால் எனக்கு

அதுபற்றி நியாபகம் இல்லை. நான் திருவாரூர் - தஞ்சாவூர் பைபாஸில் வந்து கொண்டிருந்தபோது மேற்படி பள்ளி வாகனம் நின்று கொண்டிருந்ததா அல்லது இயங்கிய நிலையில் இருந்ததா என்றால் நின்று கொண்டிருந்தது போல் தான் இருந்தது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. நான் மது அருந்திவிட்டு கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்திவிட்டு பள்ளி வாகன ஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.09 11:20:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC.106 /2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரண்யா | Husband Name | : | ஜெயகுமார் |
| Village | : | அஸ்கான் ஓடை | Taluk | : | நீடாமங்களம் |
| Caste | : | | Calling | : | Van cleaner- St.Marrys School- நீடாமங்களம் |
| Religion | : | | Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து நீடாமங்களத்தில் உள்ள St.Marrys School பள்ளி வாகனத்தில் cleaner ஆக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், ஆஜர் எதிரிதான் நான் cleaner ஆக பணிபுரியும் பள்ளி வாகனத்தின் ஓட்டுநர் ஆவார். அ.சா.1 ஐ தெரியும். சென்ற வருடத்தில் ஒருநாள் மாலை 05.00 மணியளவில் நீடாமங்களம் செல்லும் வழியில் உள்ள குச்சிபாளையம் செல்லும் வழியில் பைபாஸிலிருந்து எங்கள் வாகனத்தை நிறுத்தியிருந்தோம். வாகனத்தில் வந்த பள்ளி குழந்தை ஒருவருக்கு வாந்தி வந்ததால் அந்த இடத்தில் வேன்- ஐ நிறுத்தினோம். அ.சா.1 பைக்கில் வரும்போது போன் பேசிக்கொண்டு வந்தார். வந்தவர் வேனின்

படிகட்டில் மோதி கீழே விழுந்துவிட்டார். நானும் ஆஜர் எதிரியும் கீழே வந்து பார்த்தோம். அ.சா.1 நாங்கள் பார்க்கும் போது எழுந்துவிட்டார், அவர் காலில் சிறு சிறு சிராய்ப்பு காயம் இருந்தது. பள்ளிக்கு இது குறித்து தகவல் கொடுத்தோம். பள்ளியின் தலைமை ஆசிரியர் அ.சா.1 மற்றும் தலைமை ஆசிரியருக்கு தெரிந்த தலைவரிடம் பேசினார். சம்பவ யிடத்திலேயே நாங்கள சென்ற வேனை எடுக்க கூடாது என்று அங்கிருந்தவர்கள் கூறிவிட்டார்கள், அதனால் நாங்கள் பள்ளி குழந்தைகளை வேறு ஒரு வேனில் ஏற்றி அழைத்து சென்றோம். அதன் பிறகு வேனை பள்ளிக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையில் நான் மேற்படி விஷயங்களை கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் எத்தனை வருடங்களாக மேற்படி பள்ளியில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் 1 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். ஒரு வருடமாக வேனில் கிளீனராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி மேற்படி பள்ளியில் 3 வருடங்களாக ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறார். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிதான் வேனை வேகமாக ஓட்டி அ.சா.1 வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி அ.சா.1க்கு விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி உடன் நான் ஒன்றாக பணிபுரிவதால் நடந்த விபத்தை மறைத்து ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு இன்றைய தினம் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க செல்கிறேன் என்ற விபரம் தெரியும். தலைமை ஆசிரியர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.09 11:20:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 106 /2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அனீஷ் | Father Name | : | கல்யாணசுந்தரம் |
| Village | : | மாணிக்கமங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. சில நாட்களுக்கு முன்பு கிளியூர் பைபாஸிக்கு சென்றபோது நானும் சதீஷ் என்பவரும் அங்கு நின்று கொண்டு இருந்தோம். அப்போது போலீசார் அங்கு வந்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் எனது ஊர் பெயர் கேட்டார்கள் நான் சொன்னேன். மற்ற படி இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

போலிசார் விசார்ணையில் கடந்த 28.01.2025ம் தேதி 11.00 மணியளவில் நானும் சதீஷ் என்பவரும் கிளியூர் பைபாஸ் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அக்காவல் நிலைய குற்ற எண்.36/2025 சட்டப்பிரிவு 281, 125(a) BNSன் கீழான வழக்கின் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், சதீஷ் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரியில் நானும் சதீஷூம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.09 11:20:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC.106/2025**

Preliminary Register

Deposition of **PW-4 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ் | Father Name | : | சரவணன் |
| Village | : | மாணிக்கமங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 22 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து டிரைவராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. சில நாட்களுக்கு முன்பு கிளியூர் பைபாஸிக்கு சென்றபோது நானும் அனீஷ் என்பவரும் அங்கு நின்று கொண்டு இருந்தோம். அப்போது போலீசார் அங்கு வந்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் எனது ஊர் பெயர் கேட்டார்கள் நான் சொன்னேன். மற்ற படி இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

போலிசார் விசார்ணையில் கடந்த 28.01.2025ம் தேதி 11.00 மணியளவில் நானும் அனீஷ் என்பவரும் கிளியூர் பைபாஸ் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அக்காவல் நிலைய குற்ற எண்.36/2025 சட்டப்பிரிவு 281, 125(a) BNSன் கீழான வழக்கின் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், அனீஷ் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகஜரியில் நானும் அனீஷும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.09 11:20:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.